**MLWA HSS (Run by Jain Educational & Empowerment Trust) Madurai**
**+2 Acc Model Hly Exam 22**
12th Standard
கணக்குப்பதிவியல்

Date : 03-Dec-22

Reg.No. :

**Prepared by M.MuthuSelvam Cell No: 9842104826**

Exam Time : 03:00:00 Hrs    Total Marks : 90

## பகுதி - அ சரியான விடையை தேர்ந்தெடு

15 x 1 = 15

1) முழுமைபெறா பதிவேடுகளை பொதுவாக பராமரித்து வருவது
(a) நிறுமம் (b) அரசு (c) சிறிய அளவிலான தனிஆள் வணிகம் (d) பன்னாட்டு நிறுவனங்கள்

2) கடன் விற்பனைத் தொகை கணக்கிட தயாரிக்கப்படுவது
(a) மொத்தக் கடனாளிகள் கணக்கு (b) மொத்தக் கடனீந்தோர் கணக்கு
(c) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு (d) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு

3) பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு ஒரு
(a) பெயரளவு கணக்கு (b) சொத்து கணக்கு (c) ஆள்சார் கணக்கு (d) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

4) வருவாய் மற்றும் செலவினக் கணக்கு ஒரு
(a) பெயரளவுக் கணக்கு (b) சொத்து கணக்கு (c) ஆள்சார் கணக்கு (d) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

5) கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாத நிலையில் நிறுவனத்தின் இலாபம் கூட்டாளிகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுவது
(a) சமமான விகிதத்தில் (b) முதல் விகிதத்தில் (c) இரண்டும் (அ) மற்றும் (ஆ) (d) மேற்கூறிய எதுவுமில்லை

6) ஒரு கூட்டாளி ஒவ்வொரு மாத நடுவிலும் ஒரு குறிப்பிட்ட தொகையை வழக்கமாக எடுத்துக் கொள்ளும்போது, அந்த எடுப்புகள் மீது கணக்கிடப்படும் வட்டிக்குரிய மாதங்கள் சராசரியாக
(a) 5.5 மாதங்கள் (b) 6 மாதங்கள் (c) 12 மாதங்கள் (d) 6.5 மாதங்கள்

7) பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது?
(a) நற்பெயர் ஒரு புலனாகாச் சொத்து (b) நற்பெயர் ஒரு நடப்புச் சொத்து
(c) நற்பெயர் ஒரு கற்பனைச் சொத்து (d) நற்பெயரினை வாங்க முடியாது

8) சரியற்ற இணையினை அடையாளம் காணவும்
(a) சராசரி இலாபமுறையில் நற்பெயர் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை
(b) உயர் இலாப முறையில் நற்பெயர் = உயர் இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை
(c) ஆண்டுத்தொகை முறையில் நற்பெயர் = சராசரி இலாபம் x ஆண்டுத்தொகை காரணியின் தற்போதைய மதிப்பு
(d) கூட்டு சராசரி இலாப முறையில் நற்பெயர் = கூட்டு சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

9) மறுமதிப்பீட்டுக் கணக்கு ஒரு
(a) சொத்து க/கு (b) பெயரளவு க/கு (c) ஆள்சார் க/கு (d) ஆள்சாரா க/கு

10) பாலாஜி மற்றும் கமலேஷ் கூட்டாளிகள். இலாப நட்டங்களை 2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொண்டனர். அவர்கள் யோகேஷ் என்பவரை கூட்டாண்மையில் சேர்த்துக் கொண்டனர். பாலாஜி, கமலேஷ் மற்றும் யோகேஷின் புதிய இலாப் பகிர்வு விகிதம் 3:1:1. பாலாஜி மற்றும் கமலேஷின் தியாக விகிதத்தைக் கணக்கிடவும்.
(a) 1:3 (b) 3:1 (c) 2:1 (d) 1:2

11) கூட்டாளி ஒருவர் ஜுன் 30 அன்று கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து விலகுகிறார். அவர் கூட்டாண்மை நிறுவனத்தின் அனைத்து செயல்களுக்கும் பொறுப்பாவது
(a) நடப்பு கணக்காண்டின் இறுதி வரைக்கும் (b) முந்தைய கணக்காண்டின் இறுதி வரைக்கும்
(c) கூட்டாளி விலகும் நாள் வரைக்கும் (d) கூட்டாளியின் கணக்கைத் தீர்வு செய்யும் வரைக்கும்

12) முன்னுரிமைப் பங்கு என்பது
(i) நிலையான விகிதத்தில் பங்காதாயம் செலுத்துவதற்கான முன்னுரிமையைப் பெற்ற பங்கு
(ii) கலைப்பின்போது பங்கு முதலை திரும்பப்பெறுவதற்கான முன்னுரிமையைப் பெற்ற பங்கு
(a) (i) மட்டும் சரியானது (b) (ii) மட்டும் சரியானது (c) (i) மற்றும் (ii) சரியானது (d) (i) மற்றும் (ii) தவறான

13) பின்வரும் வாக்கியங்களில் எது சரியானதல்ல?
(a) குறிப்புகள் மற்றும் பட்டியல்களும் நிதிநிலை அறிக்கைகளின் பகுதி ஆகின்றன.
(b) நிதிநிலை அறிக்கை பகுப்பாப்பாய்வின் கருவிகளில் பொது அளவு அறிக்கை உள்ளடங்கும்.
(c) போக்குப் பகுப்பாப்பாய்வு என்பது ஓராண்டில் தொகைகளில் ஏற்படும் மாற்றங்களை ஆய்வு செய்தலைக் குறிப்பதாகும்.
(d) பொது அளவு அறிக்கை சில பொது அடிப்படைகளைக்ப்படைகளைக் கொண்டு பல்வேறு இனங்களின் தொடர்பினைக் காட்டுவதாகும். இவ்வினங்கள், பொது அளவு அடிப்படைப்படையின் சதவிகிதமதாக காட்டப்பப்படுகின்றன.

14) ஒரு இனம் மற்றொரு இனத்தோடு பெற்றிருக்கும் தொடர்பினை கணிதவியல் முறையில் கூறுவது
(a) முடிவு (b) விகிதம் (c) மாதிரி (d) தீர்மானம்

15) பயனரின் தேவைக்கேற்ப தயாரிக்கப்படும் கணக்கியல் அறிக்கையானது
(a) வழக்கமான கணக்கியல் அறிக்கை (b) குறிப்பிட்ட நோக்க அறிக்கை (c) இருப்பாய்வு
(d) இருப்புநிலைக் குறிப்பு

## பகுதி - அ கூற்று மற்றும் காரணம்

1 x 1 = 1

16) கூற்று (A) : கணினிமயக் கணக்கியல் முறை என்பது கணினி மூலம் கணக்குகளைப் பராமரிக்கும் முறையை குறிக்கும்.
காரணம் (R) : இது கணக்கோடுகளை பராமரிப்பதற்கும், கணக்கியல் அறிக்கைகைகள் தயாரிப்பதற்கும் கணக்கியல் நடவடிக்கைகளை கணினி உதவியுடன் செயல்முறைபடுத்துவதாகும்.
(அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்.
(ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.
(இ) (A) சரி ஆனால் (R) தவறு
(ஈ) (A) தவறு ஆனால் (R) சரி.

**பகுதி - அ பொருந்தாத ஒன்றை காண்க**

1 x 1 = 1

17) (அ) நீர்மைத் தன்மை விகிதங்கள்
(ஆ) தியாக விகிதம்
(இ) சுழற்சி விகிதங்கள்
(ஈ) இலாபத் தன்மை விகிதங்கள்

**பகுதி - அ சரியான வாக்கியத்தை காண்க**

1 x 1 = 1

18) 1. நிறுமம் தன்னிச்சையான அமைப்பு.
2. இதன் உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.
3. நிறும நீண்ட வாழ்நாள் கொண்டது
அ) அனைத்தும் சரி
ஆ) 1 மற்றும் 2 சரி

இ) 2 மட்டும் சரி
ஈ) 1 மற்றும் 3 சரி

**பகுதி - அ பொருந்தாத இணையை காண்க** 1 x 1 = 2

19)

| | |
|---|---|
| (அ) விற்பனை சான்றாவணம் | -ரொக்க மற்றும் கடன் கொள்முதல் |
| (ஆ) செலுத்தல் சான்றாவணம் | -ரொக்கம் அல்லது வங்கி கணக்கு வரவு வைக்கப்படும். |
| (இ) உரிய குறிப்பேடு | -தேய்மானம், வாராக் கடன் ஒதுக்கு |
| (ஈ) பெறுதல் சான்றாவணம் | -ரொக்கம் அல்லது வங்கி கணக்கு வரவு வைக்கப்படுதல் |

**பகுதி அ - சரியான இணையை காண்க** 1 x 1 = 1

20) அ) சரிகட்டப்பட்ட இறுதி முதல் - இறுதி முதல் +எடுப்புகள்-கூடுதல் முதல்
ஆ) இலாபம்/நட்டம் - இறுதி முதல் -எடுப்புகள் - கூடுதல் முதல் +தொடக்க முதல்
இ) முதல் - சொத்துகள் +பொறுப்புகள்
ஈ) சொத்துகள் பொறுப்புகள் - நிகர இலாபம்

**பகுதி ஆ - ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி மேலும் வினா எண் 30 க்கு கட்டாயம் விடையளி** 7 x 2 = 14

21) பின்வரும் விவரங்களிலிருந்து, பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கினைத் தயாரித்து கடனாளிகளிடமிருந்து பெற்ற மாற்றுச்சீட்டினைக் கணக்கிடவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| தொடக்க பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 20,000 |
| இறுதி பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 30,000 |
| மாற்றுச்சீட்டிற்கான ரொக்கம் பெற்றது | 60,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 5,000 |

22) பின்வரும் விவரங்களிலிருந்து 2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் காட்டப்பட வேண்டிய சந்தா தொகையினை கணக்கிடவும்.

| சந்தா பெற்றது | ரூ |
|---|---|
| 2015 - 16 - க்காக | 7,500 |
| 2016 –17 - க்கா | 60,00 |
| 2017 – 18 - க்கா | 1,500 |

2016-17 ஆம் ஆண்டில் பெற வேண்டிய சந்தா ரூ 2,400. 2016-2017 ஆம் ஆண்டிற்கான சந்தா 2015-2016 ஆம் ஆண்டில் பெற்றது ரூ 1,000

23) பிரியா மற்றும் கவிதா இருவரும் கூட்டாளிகள். பிரியா ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் ரூ.4,000 எடுத்துக் கொண்டார். கணக்கிடப்பட வேண்டிய எடுப்புகள் மீதான வட்டி ஆண்டுக்கு 6% 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய எடுப்புகள் மீது வட்டி, சராசரி கால முறையைப் பயன்படுத்தி கணக்கிடவும்.

24) புதிய கூட்டாளி ஒருவரை சேர்ப்பதற்காக, ஒரு நிறுவனம் 4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் கூட்டு சராசரி இலாபத்தினை பயன்படுத்தி, நற்பெயரை மதிப்பிட முடிவு செய்தது. கடந்த நான்கு ஆண்டுகளின் இலாபங்கள் மற்றும் அந்தந்த ஆண்டுகளுக்கான நிறைகள் பின்வருமாறு.

| விவரம் | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| இலாபம் (ரூ) | 20,000 | 22,000 | 24,000 | 28,000 |
| நிறை | 1 | 2 | 3 | 4 |

நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

25) கவிதா மற்றும் இராதா எனும் கூட்டாளிகள் முறையே 4:3 எனும் விகிதத்தில் இலாபநட்டம் பகிர்ந்து வந்தனர். 1.1.2019 அன்று அவர்கள் தீபா என்பவரை கூட்டாளியாக சேர்த்தனர். அந்நாளில் அவர்களுடைய இருப்புநிலைக் குறிப்பில் இலாப நட்டக் கணக்கு பற்று இருப்பாக ரூ.70,000 பகிர்ந்து தரா நட்டமாக சொத்துகள் பக்கத்தில் காட்டியது. கூட்டாளி சேர்ப்பின் போது பகிர்ந்து தரா நட்டத்தை மாற்றுவதற்கு குறிப்பேட்டுப் பதிவு தரவும்.

26) ஆதாய விகிதம் என்றால் என்ன?

27) பங்குகள் ஏன் ஒறுப்பிழப்பு செய்யப்படுகின்றன?

28) குமார் நிறுமத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து 2018 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய போது அளவு வருமான அறிக்கையை தயார் செய்யவும்.

| விவரம் | 2017-18 ரூ. |
|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 5,00,000 |
| இதர வருமானம் | 20,000 |
| செலவுகள் | 3,00,000 |

29) கீழ்க்கண்ட தகவல்களிலிருந்து விரைவு விகிதத்தைக் கணக்கிடவும். மொத்த நடப்புப் பொறுப்புகள் ரூ.2,40,000; மொத்த நடப்புச் சொத்துகள் ரூ.4,50,000; சரக்கிருப்பு: ரூ.70,000; முன்கூட்டிச் செலுத்திய செலவுகள்: ரூ20,000

30) மேலாண்மை தகவல் அமைப்பு என்றால் என்ன?

**பகுதி இ - ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி மேலும் வினா எண் 40 க்கு கட்டாயம் விடையளி** 10 x 3 = 30

31) பின்வரும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவலைக் கண்டறியவும்:

| விவரம் | ரூ. |
|---|---|
| 31.3.2019 அன்று இறுதி முதல் | 1,90,000 |
| அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல் | 50,000 |
| அவ்வாண்டின் எடுப்புகள் | 30,000 |
| 1.4.2018 அன்று தொடக்க முதல் | ? |
| 31.3.2019 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் நட்டம் | 40,000 |

32) தமிழ் கல்வியியல் மன்றத்தின் கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2019, மார்ச் 31 ஆம் நாடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கினைத் தயார் செய்யவும்

| விவரம் | ரூ | விவரம் | ரூ |
|---|---|---|---|
| தொடக்க ரொக்க இருப்பு | 18,000 | கட்டடம் வாங்கியது | 2,10,000 |
| வாடகைச் செலுத்தியது | 6,000 | பணியாளர் சம்பளம் | 55,000 |
| உதவித்தொகைத்தொகை அளித்தது | 15,200 | சந்தா பெற்றது | 2,65,000 |
| நுழைவுக் கட்டணம் பெற்றது | 18,500 | | |

33) தங்கள் இலாப நட்டங்களை சமமாகப் பகிர்ந்து வரும் சுபா மற்றும் சுதா என்ற கூட்டாளிகளின் பின்வரும் இருப்புநிலைக் குறிப்பிலிருந்து 2017, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6 கணக்கிடவும்.

2017, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | நிலைச் சொத்துகள் | 30,000 |
| சுபா | 15,000 | நடப்புச் சொத்துகள் | 20,000 |
| சுதா | 20,000 | | |
| நடப்புப் பொறுப்புகள் | 15,000 | | |
| | 50,000 | | 50,000 |

அவ்வாண்டில் சுபா மற்றும் சுதாவின் எடுப்புகள் முறையே ரூ.2,500 மற்றும் ரூ.3,500. அவ்வாண்டில் ஈட்டிய இலாபம் ரூ.15,000.

34) ஒரு நிறுவனத்தின் கடந்த நான்கு ஆண்டுகளின் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் பின்வருமாறு:
2015: ரூ.15,000; 2016: ரூ.17,000; 2017: ரூ.6,000 (நட்டம்); 2018: ரூ.14,000

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 5 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

35) இராஜேஷ் மற்றும் இரமேஷ் எனும் கூட்டாளிகள் 3.2 என இலாபநட்டம் பகிர்ந்து வந்தனர். இராமன் என்பவரை புதிய கூட்டாளியாக சேர்த்துக் கொண்டனர். அவர்களது புதிய இலாப விகிதம் 5:3:2. பின்வரும் மறுமதிப்பீடுகள் செய்யப்பட்டன. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கு தயாரிக்கவும்.
(அ) கட்டடத்தின் மதிப்பு ரூ.15,000 உயர்த்தப்பட்டது
(ஆ) இயந்திரத்தின் மதிப்பு ரூ.4,000 குறைக்கப்பட்டது
(இ) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ரூ.1,000 உருவாக்கப்பட்டது.

36) பிரின்ஸ், தேவ், சசிரேகா எனும் கூட்டாளிகள் ஒரு நிறுவனத்தின் இலாப நட்டங்களை 2:4:1 எனும் விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2019, மார்ச் 31 ஆம் நாளைய அவர்களுடைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | | கட்டடம் | 40,000 |
| பிரின்ஸ் | 30,000 | | பொறித்தொகுதி | 50,000 |
| தேவ் | 50,000 | | அறைகலன் | 10,000 |
| சசிரேகா | 20,000 | 1,00,000 | சரக்கிருப்பு | 15,000 |
| இலாப நட்டப் பகிர்வு க/கு | | 10,000 | கடனாளிகள் | 20,000 |
| பொதுக்காப்பு | | 15,000 | வங்கி ரொக்கம் | 15,000 |
| தொழிலாளர் ஈட்டு நிதி | | 17,000 | | |
| பற்பல கடனீந்தோர் | | 8,000 | | |
| | | 1,50,000 | | 1,50,000 |

1-4-2019 அன்று சசிரேகா கூட்டாண்மையிலிருந்து விலகினார். பகிர்ந்து தரா இலாபத்தைப் பகிர்ந்தளிப்பதற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்

37) அனு நிறுமத்தால் ரூ.10 முகமதிப்பில் வெளியிடப்படப்பட்ட நேர்மைப் பங்குகளில், தியாகு என்பவர் வைத்திருந்த ரூ.200 நேர்மைப் பங்குகளுக்கு இறுதி அழைப்புத் தொகையான ரூ.3 செலுத்தாத காரணத்தால் அவை ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன. அப்பங்குகள் ரூ.6 வீதம் லக் ஷ்மனுக்கு மறுவெளியீடு செய்யப்பட்டன். ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்

38) பின்வரும் விவரங்களிலிருந்து அப்துல் வரையறு நிறுமத்தின் ஒப்பீட்டு வருமான அறிக்கையை தயார் செய்யவும்.

| விவரம் | 2015-16 ரூ. | 2016-17 ரூ. |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 3,00,000 | 3,60,000 |
| இதர வருமானம் | 1,00,000 | 60,000 |
| செலவுகள் | 2,00,000 | 1,80,000 |
| வருமான வரி | 30% | 30% |

39) மரியா நிறுமத்தின் 2018 மார்ச் 31 ஆம் நாளைய இலாப நட்ட அறிக்கை பின்வருமாறு. இயக்க அடக்க விலை விகிதம் கணக்கிடவும்.

இலாப நட்ட அறிக்கை

| விவரம் | குறிப்பு எண் | தொகை ரூ. |
|---|---|---|
| I. விற்பனை மூலம் பெற்ற வருவாய் | | 8,00,000 |
| II. இதர வருமானம் | | 20,000 |
| III. மொத்த வருவாய் (I +II) | | 8,20,000 |
| IV. செலவுகள்: | | |
| கொள்முதல் செய்த சரக்குகள் | | 4,50,000 |
| சரக்கிருப்பு மாற்றம் | | (-)40,000 |
| பணியாளர் நலன்களுக்கான செலவுகள் | 1 | 22,000 |
| இதர செலவுகள் | 2 | 68,000 |
| மொத்த செலவுகள் | | 5,00,000 |
| V. வரிக்கு முன்னர் உள்ள இலாபம் (III-IV) | | 3,20,000 |

கணக்குகளுக்கான குறிப்புகள்

| விவரம் | தொகை ரூ. |
|---|---|
| 1. பணியாளர் நலன்களுக்கான செலவுகள் | |
| கூலி (நேரடி) | 10,000 |
| சம்பளம் | 12,000 |
| மொத்தம் | 22,000 |
| 2. இதர செலவுகள் | |
| நிர்வாகச் செலவுகள் | 20,000 |
| விற்பனை மற்றும் பகிர்வுச் செலவுகள் | 28,000 |
| நிலைச்சொத்து விற்றதில் ஏற்பட்ட நட்டம் | 20,000 |
| மொத்தம் | 68,000 |

40) Tally.ERP 9-ல் முன்பே வரை யறுக்கப்பட்ட பேரேடுகள் யாவை?

**பகுதி - ஈ அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 7 x 5 = 35

41) a) அகமது முறையான கணக்கேடுகளைப் பராமரிப்பதில்லை. 2018 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

| விவரம் | 1.4.2017 ரூ. | 31.3.2018 ரூ. |
|---|---|---|
| வங்கி இருப்பு | 14,000 (வ) | 18,000 (ப) |
| கைரொக்கம் | 800 | 1,500 |
| சரக்கிருப்பு | 12,000 | 16,000 |
| கடனாளிகள் | 34,000 | 30,000 |
| பொறித்தொகுதி | 80,000 | 80,000 |
| அறைகலன் | 40,000 | 40,000 |
| கடனீந்தோர் | 60,000 | 72,000 |

அகமது தனது சொந்தப் பயனுக்காக ரூ. 40,000 எடுத்துக்கொண்டார். தன்னுடைய வியாபாரத்தை விரிவுபடுத்துவதற்காக அவர் ரூ. 16,000 கூடுதல் முதல் கொண்டு வந்தார். கடனாளிகள் மீது 5% ஒதுக்கு உருவாக்க வேண்டும். பொறித்தொகுதி மீது 10% தேய்மானம் நீக்கப்பட வேண்டும்.

**(OR)**

b) மணி, ரமா மற்றும் தேவன் ஆகியோர் ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகள். தங்கள் இலாப நட்டங்களை முறையே 5:3:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். அவர்களின் 2019, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | | கட்டடம் | 80,000 |
| மணி | 50,000 | | சரக்கிருப்பு | 20,000 |
| ரமா | 50,000 | | அறைகலன் | 70,000 |
| தேவன் | 50,000 | 1,50,000 | கடனாளிகள் | 20,000 |
| பற்பல கடனீந்தோர் | | 20,000 | கைரொக்கம் | 10,000 |

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| இலாபநட்டக் க/கு | | 30,000 | | |
| | | 2,00,000 | | 2,00,000 |

பின்வரும் சரிகட்டுதல்களுக்குட்பட்டு மணி 31.03.2019 அன்று கூட்டாண்மையிலிருந்து விலகுகிறார்
(i) சரக்கிருப்பில் ரூ.5,000 மதிப்பு குறைக்கப்பட வேண்டும்
(ii) வாரா ஐயக்கடனுக்கு ரூ.1,000 ஒதுக்கு உருவாக்க வேண்டும்
(iii) கட்டடத்தின் மதிப்பு ரூ. 16,000 அதிகரிக்கப்பட வேண்டும்
(iv) மணிக்குச் சேரவேண்டியத் தொகை உடனடியாகச் செலுத்தப்படவில்லை
மறுமதிப்பீட்டு கணக்கு மற்றும் கூட்டாளி விலகலுக்குப் பின் உள்ள முதல் கணக்கினைத் தயாரிக்கவும்.

42) a) ராஜு முறையான கணக்கேடுகளைப் பின்பற்றுவதில்லை. அவருடைய பதிவேடுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் பின்வருமாறு:

| விவரம் | 1.1.2018 ரூ. | 31.12.2018 ரூ. |
|---|---|---|
| கைரொக்கம் | 80,000 | 90,000 |
| சரக்கிருப்பு | 1,80,000 | 1,40,000 |
| கடனாளிகள் | 90,000 | 2,00,000 |
| பற்பல கடனீந்தோர் | 1,30,000 | 1,95,000 |
| வங்கிக் கடன் | 60,000 | 60,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 80,000 | 45,000 |
| பொறி மற்றும் இயந்திரம் | 1,70,000 | 1,70,000 |

அவ்வாண்டில் அவர் கொண்டுவந்த கூடுதல் முதல் ரூ. 50,000 மற்றும் அவர் வியாபாரத்திலிருந்து தன்னுடைய சொந்த பயனுக்காக மாதந்தோறும் ரூ. 2,500 எடுத்துக்கொண்டார். மேற்கண்ட தகவல்களிலிருந்து இலாப நட்ட அறிக்கை தயாரிக்கவும்.

**(OR)**

b) சென்னை விளையாட்டு மன்றத்தின் கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கினைத் தயார் செய்யவும்

| விவரம் | ரூ | விவரம் | ரூ | ரூ |
|---|---|---|---|---|
| தொடக்க இருப்பு (1.4.2017 | 10,000 | சந்தா பெற்றது | | |
| தொடக்க வங்கி இருப்பு (1.4.2017 | 15,000 | 2016 – 2017 | 4,500 | |
| வட்டி செலுத்தியது | 5,000 | 2017 – 2018 | 65,000 | |
| தொலைபேசி செலவுகள் | 7,000 | 2018 – 2019 | 5,000 | 74,500 |
| மைதானம் பராமரித்தது | 22,500 | தொடர் விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | | 12,500 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் பெற்றது | 5,500 | தொடர் விளையாட்டுப் போட்டி நிதி வரவுகள் | | 15,000 |
| மட்டைகள் மற்றும் பந்துகள் வாங்கியது | 13,000 | இறுதிரொக்க இருப்பு (31.3.2018) | | 5,000 |

43) a) கீழ்க்காணும் தென்காசி திருவள்ளுவர் மன்றத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கைத் தயார் செய்யவும்.

| பெறுதல்கள் | ரூ | செலுத்தல்கள் | ரூ |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு | | சம்பளம் | 20,000 |
| கைரொக்கம் | 14,000 | வாடகை | 24,000 |
| வட்டிப் பெற்றது | 5,000 | பயணச் செலவுகள் | 2,000 |
| சந்தா | 55,000 | அச்சு மற்றும் எழுதுபொருள் | 6,000 |
| உயில்கொடை | 48,000 | முதலீடுகள் செய்தது | 50,000 |
| நுழைவுக் கட்டணம் | 7,000 | விளையாட்டு உபகரணங்கள் வாங்கியது | 33,000 |
| அறைகலன் விற்றது (ஏட்டு மதிப்பு ரூ.17,000) | 16,000 | இருப்பு கீ/இ | |
| | | கைரொக்கம் | 10,000 |

**(OR)**

b) ரகு மற்றும் சாம் எனும் கூட்டாளிகள் முறையே 3:2 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். 2017 மார்ச் 31 அன்று அவர்களின் இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துகள் | ரூ. | ரூ. |
|---|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் | | | இயந்திரம் | | 30,000 |
| ரகு | 40,000 | | அறைகலன் | | 10,000 |
| சாம் | 30,000 | 70,000 | சரக்கிருப்பு | | 10,000 |
| பற்பல கடனீந்தோர் | | 30,000 | கடனாளிகள் | 21,000 | |
| | | | கழிக்க: வாரா ஐயக்கடன் ஒதுக்கு | 1,000 | 20,000 |
| | | | வங்கி | | 30,000 |
| | | 1,00,000 | | | 1,00,000 |

1.4.2017 அன்று பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு பிரகாஷ் என்பவரை கூட்டான்மையில் சேர்த்தனர்.
(அ) பிரகாஷ் ரூ.10,000 முதல் கொண்டு வருவது
(ஆ) இயந்திரம் ரூ.24,000 என மதிப்பிடப்பட்டது
(இ) அறைகலனின் மதிப்பில் ரூ.3,000 குறைப்பது
(ஈ) வாரா ஐயக்கடன் ஒதுக்கை ரூ.3,000 என அதிகரிப்பப்பது
(உ) ஏடுகளில் பதிவு பெறாமலுள்ள கணக்குகளின் மூலம் பெறவேண்டியவைகள் மதிப்பு ரூ.1,000 பதிவு செய்தல்.
குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டு கணக்கு மற்றும் முதல் கணக்குகளைத் தயாரிக்கவும்.

44) a) பின்வரும் தகவல்களிலிருந்து சாந்தி மற்றும் சுமதி என்ற கூட்டாளிகளின் முதல் கணக்குகளை அவர்களின் முதல், நிலை முதலாக இருக்கும் போது தயாரிக்கவும்.

| விவரம் | சாந்தி ரூ. | சுமதி ரூ. |
|---|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று முதல் | 1,00,000 | 80,000 |
| 2018, ஜனவரி 1 அன்று நடப்புக் கணக்கு (வ) | 5,000 | 3,000 |
| 2018, ஜூன் 1 கூடுதல் முதல் கொண்டு வந்தது | 10,000 | 20,000 |
| 2018 ஆம் ஆண்டில் எடுப்புகள் | 20,000 | 13,000 |
| எடுப்புகள் மீது வட்டி | 500 | 300 |
| 2018 – ல் இலாபப் பங்கு | 10,000 | 8,000 |
| முதல் மீது வட்டி | 6,300 | 5,400 |
| ஊதியம் | 9,000 | - |
| கழிவு | - | 1,200 |

**(OR)**

b) நவீன் நிறுமத்தின் பின்வரும் வணிக நடவடிக்கைகயிலிருந்து
(i) மொத்த இலாப விகிதம்
(ii) நிகர இலாப விகிதம்
(iii) இயக்க அடக்கவிலை விகிதம்
(iv) இயக்க இலாப விகிதம் கணக்கிடவும்.

இலாப நட்ட அறிக்கை

| விவரம் | ரூ. |
|---|---|
| I. விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 20,000 |
| II. இதர வருமானம் | |
| முதலீடு மூலம் வருவாய் | 200 |
| III. மொத்த வருவாய் (I+II) | 20,200 |
| IV. செலவுகள்: | |
| கொள்முதல் செய்த சரக்குகள் | 17,000 |
| சரக்கிருப்பு மாற்றம் | (–)1,000 |
| நிதிசார் செலவுகள் | 300 |
| இதர செலவுகள் (நிர்வாகம் மற்றும் விற்பனை) | 2,400 |
| மொத்த செலவுகள் | 18,700 |
| V. அவ்வாண்டிற்கான வரிக்கு முன்னர் உள்ள இலாபம் (III - IV) | 1,500 |

45) a) அந்தோணி மற்றும் ரஞ்சித் 2018, ஏப்ரல் 1 அன்று முறையே ரூ.4,00,000 மற்றும் ரூ.3,00,000 முதலாகக் கொண்டு தொழில் தொடங்கினர். கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி அந்தோணி ஆண்டுக்கு ரூ.90,000 ஊதியம் பெற வேண்டும். முதல் மீது வட்டி ஆண்டுக்கு 5% மற்றும் அந்தோனியின் ஊதியம் மற்றும் கழிவினை கழித்ததற்கு பின் உள்ள இலாபத்தில் 25% ரஞ்சித் கழிவாகப் பெற வேண்டும். இரு கூட்டாளிகளுக்கு இடையேயான இலாபப் பகிர்வு விகிதம் 1:1. அவ்வாண்டில் நிறுவனம் ஈட்டிய இலாபம் ரூ.3,65,000.
இலாபநட்டப் பகிர்வு கணக்கை தயாரிக்கவும். நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 ல் கணக்கு முடிக்கிறது.

**(OR)**

b) பின்வரும் விவரங்களைக் கொண்டு நெய்தல் வரையறு நிறுமத்தின் போக்கு சதவீதங்களைக் கணக்கிடவும்.

| விவரம் | ரூ.இலட்சங்களில் | | |
|---|---|---|---|
| | **2015-16** | **2016-17** | **2017-18** |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 150 | 135 | 90 |
| இதர வருமானம் | 25 | 5 | 15 |
| செலவுகள் | 125 | 75 | 50 |
| வருமானவரி | 40% | 40% | 40% |

46) a) கூட்டாண்மை அடிப்படையில் நடத்தப்படும் ஒரு வணிகத்தின் விவரங்கள் பின்வருமாறு:
(அ) ஈட்டிய இலாபங்கள் : 2016: ரூ.30,000; 2017: ரூ.29,000 மற்றும் 2018: ரூ.32,000.
(ஆ) 2016 ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ரூ.3,000 சேர்ந்துள்ளது.
(இ) சரக்கிருப்பு தீயினால் சேதமடைந்ததால் 2017 ஆம் ஆண்டின் இலாபத்தில் ரூ.2,000 குறைக்கப்பட்டது.
(ஈ) சரக்கிருப்பு காப்பீடு செய்யப்படவில்லை. ஆனால், எதிர்காலத்தில் காப்பீடு செய்வதென முடிவு செய்யப்பட்டது. அதற்கான காப்பீட்டுக் கட்டணம் ஆண்டுக்கு ரூ.5,600 என மதிப்பிடப்பட்டது.
3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

**(OR)**

b) சந்திரா நிறுமத்தின் பின்வரும் இருப்புநிலைக்குறிப்பிலிருந்து 2016 மார்ச் 31 மற்றும் 2017 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய ஒப்பீட்டு இருப்புநிலைக்குறிப்பினைத் தயார் செய்யவும்.

| விவரம் | **2016, மார்ச் 31** | **2017, மார்ச் 31** |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| I.பங்குமூலதனம் மற்றும்பொறுப்புகள் | | |
| பங்குதாரர் நிதி | 1,00,000 | 2,60,000 |
| நீண்ட காலப் பொறுப்புகள் | 50,000 | 60,000 |
| நடப்புப் பொறுப்புகள் | 25,000 | 30,000 |
| மொத்தம் | 1,75,000 | 3,50,000 |
| II. சொத்துகள் | | |
| நிலைச் சொத்துகள் | 1,00,000 | 2,00,000 |
| நடப்புச் சொத்துகள் | 75,000 | 1,50,000 |
| மொத்தம் | 1,75,000 | 3,50,000 |

47) a) பின்வரும் தகவல்களிலிருந்து, உயர் இலாபத்தினை மூலதனமாக்கல் முறையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.
(அ) சாதாரண இலாப விகிதம் 10%
(ஆ) கடந்த 4 ஆண்டுகளின் இலாபங்கள் ரூ.30,000, ரூ.40,000, ரூ.50,000 மற்றும் ரூ.45,000.
(இ) மேற்குறிப்பிட்ட இலாபம் ரூ.30,000 ல் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ரூ.3,000 சேர்ந்துள்ளது.
(ஈ) சராசரி பயன்படுத்தப்பட்ட முதல் ரூ.3,00,000.

**(OR)**

b) ஜெனிபர் நிறுமம் பங்கொன்று ரூ.10 முகமதிப்புள்ள 10,000 பங்குகளை வெளியிட்டது. பங்கொன்றுக்கு விண்ணப்பத்தின் மீது ரூ.3, ஒதுக்கீட்டின் மீது ரூ.3, முதல் அழைப்பின் மீது ரூ.2 மற்றும் இரண்டாம் மற்றும் இறுதி அழைப்பின் மீது ரூ.2 செலுத்த வேண்டி இருந்தது. சுப்பு என்பவர் 100 பங்குகளுக்கான இரண்டாவது மற்றும் இறுதி அழைப்பினைக் கட்ட தவறினார். எஞ்சிய தொகைகள் அனைத்தும் பெறப்பட்டன. சுப்புவின் பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன மற்றும் அவைகள் ஹேமா என்பவருக்கு பங்கு ஒன்று ரூ.7 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டன. மேற்கண்ட நடவடிக்கைகளுக்கு குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்.

# முயற்சி செய்து கொண்டே இரு.
# ஒரு நாள் தோல்வி தோற்றுப்போகும் உன் முயற்சியிடம்.

*******************************************

www.Padasalai.Net www.CBSEtips.in

**MLWA HSS (Run by Jain Educational & Empowerment Trust) Madurai**

**+2 Acc Model Hly Exam 22**

Date : 22-Nov-22

12th Standard

Reg.No. :

## கணக்குப்பதிவியல்

**Prepared by M.MuthuSelvam Cell No: 9842104826**

Time : 03:00:00 Hrs

Total Marks : 90

### பகுதி - அ சரியான விடையை தேர்ந்தெடு
15 x 1 = 15

1) (c) சிறிய அளவிலான தனிஆள் வணிகம்
2) (a) மொத்தக் கடனாளிகள் கணக்கு
3) (b) சொத்து கணக்கு
4) (a) பெயரளவுக் கணக்கு
5) (a) சமமான விகிதத்தில்
6) (b) 6 மாதங்கள்
7) (a) நற்பெயர் ஒரு புலனாகாச் சொத்து
8) (c) ஆண்டுத்தொகை முறையில் நற்பெயர் = சராசரி இலாபம் x ஆண்டுத்தொகை காரணியின் தற்போதைய மதிப்பு
9) (b) பெயரளவு க/கு
10) (d) 1:2
11) (c) கூட்டாளி விலகும் நாள் வரைக்கும்
12) (c) (i) மற்றும் (ii) சரியானது
13) (c) போக்குப் பகுப்பாப்பாய்வு என்பது ஓராண்டில் தொகைகளில் ஏற்படும் மாற்றங்களை ஆய்வு செய்தலைக் குறிப்பதாகும்.
14) (b) விகிதம்
15) (b) குறிப்பிட்ட நோக்க அறிக்கை

### பகுதி - அ கூற்று மற்றும் காரணம்
1 x 1 = 1

16) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்

**பகுதி - அ பொருந்தாத ஒன்றை காண்க** 1 x 1 = 1

17) தியாக விகிதம் :
தியாக விகிதம் என்பது பழைய கூட்டாளிகள் தங்கள் இலாபத்தில் ஒரு விகிதத்தை புதிய கூட்டாளிக்கு ஆதரவாக தியாகம் செய்வது அல்லது விட்டுக் கொடுப்பது ஆகும், மற்ற மூன்றும் செயல்பாட்டின் அடிப்படையில் விகிதங்களில் வகைகள் ஆகும்.

**பகுதி - அ சரியான வாக்கியத்தை காண்க** 1 x 1 = 1

18) அ) அனைத்தும் சரி

**பகுதி - அ பொருந்தாத இணையை காண்க** 1 x 1 = 2

19) விற்பனை சான்றாவணம் - ரொக்க மற்றும் கடன் கொள்முதல்

**பகுதி அ - சரியான இணையை காண்க** 1 x 1 = 1

20) அ) சரிகட்டப்பட்ட இறுதி முதல் - இறுதி முதல் +எடுப்புகள்-கூடுதல் முதல்

**பகுதி ஆ - ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி மேலும் வினா எண் 30 க்கு கட்டாயம் விடையளி** 7 x 2 = 14

21)
ப பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கு வ

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | 20,000 | ரொக்கக் க/கு | 60,000 |
| கடனாளிகள் க/கு (அவ்வாண்டில் பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு பெற்றது - இருப்புக் கட்டும் தொகை) | **75,000** | கடனாளிகள் க/கு (பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது) | 5,000 |
| | | இருப்பு கீ/இ | 30,000 |
| | 95,000 | | 95,000 |

22)

| செலவுகள் | ரூ | வருமானம் | ரூ | ரூ |
|---|---|---|---|---|
| | | சந்தா பெற்றது | 60,000 | |
| | | கூட்டுக: பெறவேண்டிய சந்தா (2016-17) | 2,400 | |
| | | கூட்டுக: 2016-2017 ஆம் ஆண்டிற்குரிய சந்தா 2015-16 –ல் முன்கூட்டிப் பெற்றது | 1,000 | 63,400 |

மாணவர் குறிப்பு
(i) 2015-16 ஆம் ஆண்டிற்ககான சந்தா ரூ. 7,500 மற்றும் 2017-18 ஆம் ஆண்டிற்கான சந்தா ரூ1,500 நடப்பாண்டிற்குதொடர்டர்புடையது அல்ல. எனவே, அவை வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் பதியப்படுவதில்லை.
(ii) நடப்பு ஆண்டு 2016-17-ல் பெறவேண்டிய சந்தா ரூ.2,400. இது 2016-17 ல் பெறப்பட்ட சந்தாவுடன் கூட்டப்பட வேண்டும்.

23) பிரியாவின் எடுப்புகள் மீதான வட்டி கணக்கிடுதல் (சராசரி கால முறையை பயன்படுத்தி)
மொத்த எடுப்புத் தொகை = 4,000 × 4 =ரூ.16,000
எடுப்புகள் ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் எடுத்திருந்தால், சராசரி காலம் = 4.5

எடுப்புகள் மீது வட்டி $= \text{மொத்த எடுப்புத் தொகை} \times \text{வட்டி வீதம்} \times \frac{\text{சராசரி காலம்}}{12}$

$=$ரூ.$16,000 \times \frac{6}{100} \times \frac{4.5}{12}$ $=$ரூ.360

24)

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

கூட்டு சராசரி இலாப முறை கணக்கிடல்

| ஆண்டு | இலாபம் (அ) ரூ. | நிறைகள் (ஆ) | கூட்டு இலாபம் (அ x ஆ) ரூ. |
|---|---|---|---|
| 2015 | 20,000 | 1 | 20,000 |
| 2016 | 22,000 | 2 | 44,000 |
| 2017 | 24,000 | 3 | 72,000 |
| 2018 | 28,000 | 4 | 1,12,000 |
| | மொத்தம் | 10 | 2,48,000 |

$$\text{சராசரி இலாபம்} = \frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$$

$= \frac{2,48,000}{10}$ =ரூ.24,800

நற்பெயர் = கூட்டு சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை
= 24,800 × 3 = ரூ.74,400

25) குறிப்பேட்டுப் பதிவு

| நாள் | விவரம் | | பே.ப.எண் | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|---|---|---|
| 2019 ஜனவரி 1 | கவிதா முதல் க/கு (4/7) | ப | | 40,000 | |
| | இராதா முதல் க/கு (3/7) | ப | | 30,000 | |
| | இலாப நட்ட க/கு (பகிர்ந்து தரா நட்டம் பழைய கூட்டாளிகளின் முதல் கணக்குக்கு பழைய இலாபவிகிதத்தில் மாற்றப்பட்டது) | | | | 70,000 |

26) (i) தொடரும் கூட்டாளிகள் விலகும் கூட்டாளியின் இலாபப் பங்கிலிருந்து ஒரு பகுதியை ஆதாயமாகப் பெறுகின்றனர்
(ii) அந்த ஆதாயம் அனைத்துக் கூட்டாளிகளினாலும் அல்லது ஒரு சில கூட்டாளிகளிளாலும் பிரித்துக் கொள்ளப்படும். ஆதாய விகிதம் என்பது தொடரும் கூட்டாளிகளும் கிடைக்கப்பெற்ற இலாபத்தின் விகிதாச்சாரம் ஆகும்

27) 1. பங்குதாரர் ஒருவர் ஒதுக்கீட்டு பணத்தையோ அல்லது அழைப்புப் பணத்தையோ செலுத்தத் தவறினால் அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்படும்.
2. ஒறுப்பிழப்பு செய்யும் போது, ஒதுக்கீடு ரத்து செய்யப்படுவதால், அந்த அளவிற்கு செலுத்திய முதல் குறைக்கப்படும். ஒறுப்பிழப்பு செய்ததற்கு பிறகு அந்த நபர் பங்குதாரர் என்ற தகுதியை இழக்கிறார்.

28) குமார் நிறுமத்தின் 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான பொது அளவு வருமான அறிக்கை

| விவரம் | தொகை ரூ. | விற்பனை மூலம் பெற்ற வருவாயில் சதவீதம் |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 5,00,000 | 100 |
| கூட்டுக: இதர வருமானம் | 20,000 | 4 |
| மொத்த வருவாய் | 5,20,000 | 104 |
| கழிக்க: செலவுகள் | 3,00,000 | 60 |
| வரிக்கு முன்னர் உள்ள இலாபம் | 2,20,000 | 44 |

குறிப்பு: பிற வருமானத்திற்கான சதவீதம் கணக்கிடுதல்

$= \frac{20,000}{5,00,000} \times 100 = 4\%$

29) $\text{நடப்பு விகிதம்} = \frac{\text{நடப்புச் சொத்துகள்}}{\text{நடப்புப் பொறுப்புகள்}}$

நீர்மைச் சொத்துகள் = நடப்புச் சொத்துகள் - சரக்கிருப்பு - முன்கூட்டிச் செலுத்திய செலவுகள்
= 4,50,000-70,000-20,000
=ரூ.3,60,000

$\therefore$ விரைவு விகிதம் = $\frac{3,60,000}{2,40,000} = 1.5 : 1$

30) (i) மேலாண்மை தகவல் அமைப்பு என்பது மேலாண்மையின் அனைத்து நிலைகளிலும் முடிவெடுப்பதற்கு தேவையான தகவலை அளிக்கும் ஒரு முறையாகும்.
(ii) உற்பத்தி தகவல் அமைப்பு, சந்தையிடுதல் தகவல் அமைப்பு, மனிதவள தகவல் அமைப்பு மற்றும் கணக்கியல் தகவல் அமைப்பு ஆகியவை இதில் அடங்கும்.

**பகுதி இ - ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி மேலும் வினா எண் 40 க்கு கட்டாயம் விடையளி** 10 x 3 = 30

31) 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான இலாப நட்ட அறிக்கை

| விவரம் | ரூ. |
|---|---|
| இறுதி முதல் (31.3.2019) | 1,90,000 |
| கூட்டுக: அவ்வாண்டின் எடுப்புகள் | 30,000 |
| | 2,20,000 |
| கழிக்க: அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல் | 50,000 |
| சரிக்கட்டப்பட்ட இறுதி முதல் | 1,70,000 |
| கழிக்க: தொடக்க முதல் (1.4.2018) (இருப்புக் கட்டும் தொகை) | 2,10,000 |
| 31.3.2019 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் நட்டம் | (-) 40,000 |

32) ப தமிழ் கல்வியியல் மன்றத்தின் ஏடுகளில் 2019, மார்ச் 31 ஆம் நாளளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு வ

| பெறுதல்கள் | ரூ. | செலுத்தல்கள் | ரூ |
|---|---|---|---|
| இருப்பு கீ/க | | வாடகை செலுத்தியது | 6,000 |
| கைரொக்கம் | 18,000 | உதவித்தொகை அளித்தது | 15,200 |
| நுழைவுக்கட்டணம் | 18,500 | கட்டடம் வாங்கியது | 2,10,000 |
| சந்தா பெற்றது | 2,65,000 | பணியாளர் சம்பளம் | 55,000 |
| | | இருப்பு கீ/இ கைரொக்கம் | 15,300 |
| | 3,01,500 | | 3,01,500 |

www.Padasalai.Net

33)

| விவரம் | சுபா ரூ. | சுதா ரூ. |
|---|---|---|
| 2017, டிசம்பர் 31 அன்று முதல் | 15,000 | 20,000 |
| கூட்டுக: எடுப்புகள் | 2,500 | 3,500 |
| | 17,500 | 23,500 |
| கழிக்க: இலாபம் ஏற்கனவே வரவு வைத்தது | 7,500 | 7,500 |
| 2017, ஜனவரி 1 அன்று முதல் | 10,000 | 16,000 |

முதல் மீது வட்டி கணக்கிடுதல்:
சுபா:
தொடக்க முதல்=10,000 x $\frac{6}{100}$ =ரூ.600

சுதா:
தொடக்க முதல் =16,000 x $\frac{6}{100}$=ரூ.960

34) நற்பெயர் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

சராசரி இலாபம் = $\frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$

= $\frac{15,000+17,000-6,000+14,000}{4}$

= $\frac{40,000}{4}$ =ரூ.10,000

நற்பெயர் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை
= 10,000 × 5 = ரூ.50,000

35) குறிப்பேட்டுப் பதிவு

| நாள் | விவரம் | | பே.ப.எண் | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|---|---|---|
| | கட்டடம் க/கு | ப | | 15,000 | |
| | மறுமதிப்பீட்டு க/கு | | | | 15,000 |
| | (கட்டடத்தின் மதிப்பு உயர்த்துவது பதிவு செய்யப்பட்டது) | | | | |
| | மறுமதிப்பீட்டு க/கு | ப | | 5,000 | |
| | இயந்திரம் க/கு | | | | 4,000 |
| | வாரா ஐயக்கடன் ஒதுக்கு க/கு | | | | 1,000 |
| | (இயந்திரத்தின் மதிப்பு குறைப்பது மற்றும் ஒதுக்கு பதிவு செய்யப்பட்டது) | | | | |
| | மறுமதிப்பீட்டு | ப | | 10,000 | |
| | இராஜேஷ் முதல் க/கு | | | | 6,000 |
| | இரமேஷ் முதல் க/கு | | | | 4,000 |
| | (மறுமதிப்பீட்டு இலாபம் பகிர்ந்தளித்தது) | | | | |

மறுமதிப்பீட்டுக் கணக்கு

| விவரம் | ரூ. | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|---|
| இயந்திரம் க/கு | | 4,000 | | 15,000 |
| வாரா ஐயக்கடன் ஒதுக்கு க/கு | | 1,000 | | |
| மறுமதிப்பீட்டு இலாபம்: | | | | |
| இராஜேஷ் முதல் க/கு (3/5) | 6,000 | | | |
| இரமேஷ் முதல் க/கு (2/5) | 4,000 | 10,000 | | |
| | | 15,000 | | 15,000 |

36) குறிப்பேட்டுப் பதிவு

| நாள் | விவரம் | | பே.ப.எ | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|---|---|---|
| 2019 மார்ச் 1 | இலாப நட்டப் பகிர்வு க/கு | ப | | 10,000 | |
| | பொதுக்காப்பு க/கு | ப | | 15,000 | |
| | தொழிலாளர் ஈட்டு நிதி க/கு | ப | | 17,000 | |
| | பிரின்ஸ் முதல் க/கு (42000 x 2/7) | | | | 12,000 |
| | தேவ் முதல் க/கு (42000 x 4/7) | | | | 24,000 |
| | சசிரேகா முதல் க/கு (42000 x 1/7) | | | | 6,000 |
| | (பகிர்ந்து தரா இலாபம் மற்றும் காப்புகள் அனைத்து கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு பழைய இலாப விகிதத்தில் மாற்றப்பட்டது) | | | | |

37) அனு நிறுமத்தின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | | பே. ப.எ | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|---|---|---|
| | நேர்மைப் பங்கு முதல் க/கு (200 × 10) | ப | | 2,000 | |
| | நேர்மைப் பங்கு இறுதி அழைப்பு க/கு (200 × 3) | | | | 600 |
| | பங்கு ஒறுப்பிழப்பு க/கு (200 × 7) | | | | 1,400 |
| | (200 பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன) | | | | |
| | வங்கி க/கு (200 × 6) | ப | | 1,200 | |
| | பங்கு ஒறுப்பிழப்பு க/கு (200 × 4) | ப | | 800 | |
| | நேர்மைப் பங்குமுதல் க/கு (200 × 10) | | | | 2,000 |
| | (ஒறுப்பிழப்பு செய்த பங்குகள் மறுவெளியீடு செய்யப்பட்டன) | | | | |
| | பங்கு ஒறுப்பிழப்பு க/கு (1,400-800) | ப | | 600 | |
| | முதலினக் காப்பு க/கு | | | | 600 |
| | (பங்கு ஒறுப்பிழப்பு கணக்கு முதலினக் காப்பு கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | | | |

38)

www.Padasalai.Net

அப்துல் வரையறு நிறுமத்தின் 2016, மார்ச் 31 மற்றும் 2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய ஒப்பீட்டு வருமான அறிக்கை

| **விவரம்** | **2015-16** ரூ. | **2016-17** ரூ. | **தொகையின் கூடுதல் (+) அல்லது குறைவு (-)** ரூ. | **சதவீதத்தின் கூடுதல் (+) அல்லது குறைவு (-)** |
|---|---|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 3,00,000 | 3,60,000 | +60,000 | +20 |
| கூட்டுக: இதர வருமானங்கள் | 1,00,000 | 60,000 | –40,000 | –40 |
| மொத்த வருமானங்கள் | 4,00,000 | 4,20,000 | +20,000 | +5 |
| கழிக்க: செலவுகள் | 2,00,000 | 1,80,000 | –20,000 | –10 |
| வரிக்கு முன் இலாபம் | 2,00,000 | 2,40,000 | +40,000 | +20 |
| கழிக்க: வருமானவரி 30% | 60,000 | 72,000 | +12,000 | +20 |
| வரிக்கு பின்னர் உள்ள இலாபம் | 1,40,000 | 1,40,000 | +28,000 | +20 |

39) இயக்க அடக்க விலை விகிதம் = $\frac{\text{இயக்க அடக்க விலை}}{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}}$ x 100

= $\frac{4,20,000+60,000}{8,00,000} \times \frac{4,80,000}{8,00,000}$ x 100 = 60%

விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்க விலை = சரக்கிருப்பின் கொள்முதல் + சரக்கிருப்பு மாற்றம் + நேரடிச் செலவுகள் (கூலி)

= 4,50,000 + (40,000) + 10,000 = ரூ.4,20,000

இயக்கச் செலவுகள் = நிர்வாகச் செலவுகள் + விற்பனை மற்றும் பகிர்வுச் செலவுகள் + பணியாளர்கள் நலன்களுக்கானச் செலவுகள் (சம்பளம்)

= 20,000 + 28,000 + 12,000 = ரூ.60,000

இயக்க அடக்க விலை = விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்க விலை + இயக்கச் செலவுகள்

= 4,20,000 + 60,000 = ரூ.4,80,000

நிலைச்சொத்துகள் விற்பனை மீதான நட்டம் ஒரு இயக்கம் சாரா செலவு. எனவே, இது தவிர்க்கப்பட வேண்டும்.

40) (i) Tally-ல் நடவடிக்கைகளை பதிவு செய்வதற்கு நடவடிக்கைகளை தொடர்புடைய பேரேட்டு கணக்குடன் அடையாளம் காண வேண்டும்.

(ii) முன்பே வரையறுக்கப்பட்ட ரொக்கம் மற்றும் இலாப நட்டக் க/கு ஆகிய இரண்டு பேரேடுகளை Tally கொண்டுள்ளது.மற்ற பேரேடுகளை அவற்றின் தேவைக்கேற்ப பயனர் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

(iii) பேரேடு உருவாக்குவதற்கு:
Gageway of Tally > Masters > Accounts Info > Ledgers > Single Ledger > Create.

**பகுதி - ஈ அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 7 x 5 = 35

41) a)

அகமது என்பவரின் ஏடுகளில் தொடக்க முதல் கணக்கிடுதல் 2017, மார்ச் 31 ஆம் நாளைய நிலையறிக்கை

| **பொறுப்புகள்** | **ரூ.** | **சொத்துகள்** | **ரூ.** |
|---|---|---|---|
| வங்கி மேல்வரைப்பற்று | 14,000 | கைரொக்கம் | 800 |
| கடனீந்தோர் | 60,000 | சரக்கிருப்பு | 12,000 |
| முதல் (இருப்புக் கட்டும் தொகை) | **92,800** | கடனாளிகள் | 34,000 |
| | | பொறித்தொகுதி | 80,000 |
| | | அறைகலன் | 40,000 |
| | 1,66,800 | | 1,66,800 |

இறுதிமுதல் கணக்கிடுதல் 2018, மார்ச் 31 ஆம் நாளைய நிலையறிக்கை

| **பொறுப்புகள்** | **ரூ.** | **சொத்துகள்** | **ரூ.** | **ரூ.** |
|---|---|---|---|---|
| கடனீந்தோர் | 72,000 | வங்கி இருப்பு | | 18,000 |
| முதல் (இருப்புக் கட்டும் தொகை) | **1,04,000** | கைரொக்கம் | | 1,500 |
| | | சரக்கிருப்பு | | 16,000 |
| | | கடனாளிகள் | 30,000 | |
| | | கழிக்க: கடனாளிகள் மீதான ஒதுக்கு 5% | 1,500 | 28,500 |
| | | பொறித்தொகுதி | 80,000 | |
| | | கழிக்க: தேய்மானம் | 8,000 | 72,000 |
| | | அறைகலன் | | 40,000 |
| | 1,76,000 | | | 1,76,000 |

2018 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான இலாப நட்ட அறிக்கை

| **விவரம்** | **ரூ.** |
|---|---|
| 31.3.2018 அன்று இறுதிமுதல் | 1,04,000 |
| கூட்டுக: அவ்வாண்டின் எடுப்புகள் | 40,000 |
| | 1,44,000 |
| கழிக்க: அவ்வாண்டில் கொண்டுவரப்பட்ட கூடுதல் முதல் | 16,000 |
| சரிக்கட்டப்பட்ட இறுதிமுதல் | 1,28,000 |
| கழிக்க: 31.3.2017 அன்று தொடக்க முதல் | 92,800 |
| 31.3.2018 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் இலாபம் | **35,200** |

**(OR)**

b)

www.Padasalai.Net

ப மறுமதிப்பீட்டுக் கணக்கு வ

| விவரம் | ரூ. | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|---|
| சரக்கிருப்பு க/கு | | 5,000 | கட்டடக் க/கு | 16,000 |
| வாரா ஐயக்கடன் ஒதுக்கு க/கு | | 1,000 | | |
| மறுமதிப்பீட்டு இலாபம்: | | | | |
| மணி முதல் க/கு (4/10) | 4,000 | | | |
| ரமா முதல் க/கு (3/10) | 3,000 | | | |
| தேவன் முதல் க/கு (3/10) | 3,000 | 10,000 | | |
| | | 16,000 | | 16,000 |

ப முதல் கணக்கு வ

| விவரம் | மணி ரூ. | ரமா ரூ. | தேவன் ரூ. | விவரம் | மணி ரூ. | ரமா ரூ. | தேவன் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| மணி கடன் க/கு | 66,000 | | | இருப்பு கீ/கொ | 50,000 | 50,000 | 50,000 |
| இருப்பு கீ/இ | - | 62,000 | 62,000 | மறுமதிப்பீட்டுக் க/கு | 4,000 | 3,000 | 3,000 |
| | | | | இலாபநட்ட க/கு | 12,000 | 9,000 | 9,000 |
| | 66,000 | 62,000 | 62,000 | | 66,000 | 62,000 | 62,000 |
| | | | | | - | 62,000 | 62,000 |

42) a)

தொடக்க முதல் கணக்கிடுதல்:

ராஜீ என்பவரின் ஏடுகளில் 2018 ஜனவரி 1 ஆம் நாளைய நிலை அறிக்கை

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 1,30,000 | கைரொக்கம் | 80,000 |
| வங்கிக்கடன் | 60,000 | சரக்கிருப்பு | 1,80,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 80,000 | கடனாளிகள் | 90,000 |
| முதல் (இருப்புக்கட்டும் தொகை) | 2,50,000 | பொறி மற்றும் இயந்திரம் | 1,70,000 |
| | 5,20,000 | | 5,20,000 |

இறுதிமுதல் கணக்கிடுதல்:

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 1,95,000 | கைரொக்கம் | 90,000 |
| வங்கிக் கடன் | 60,000 | சரக்கிருப்பு | 1,40,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 45,000 | கடனாளிகள் | 2,00,000 |
| முதல் (இருப்புக்கட்டும் தொகை) | 3,00,000 | பொறி மற்றும் | 1,70,000 |
| | 6,00,000 | | 6,00,000 |

2018,டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான இலாபநட்ட அறிக்கை

| விவரம் | ரூ. |
|---|---|
| 31.12.2018 அன்று இறுதிமுதல் | 3,00,000 |
| கூட்டுக: அவ்வாண்டின் எடுப்புகள் (2500x12) | 30,0000 |
| | 3,30,000 |
| கழிக்க: அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல் | 50,000 |
| சரிகட்டப்பட்ட இறுதிமுதல் | 2,80,000 |
| கழிக்க:1.1.2018 அன்று தொடக்க முதல் | 2,50,000 |
| அவ்வாண்டின் இலாபம் | 30,000 |

**(OR)**

b)

ப சென்னை விளையாட்டு மன்றத்தின் ஏடுகளில் 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு வ

| பெறுதல்கள் | ரூ | ரூ | செலுத்தல்கள் | ரூ | ரூ |
|---|---|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | | வட்டி செலுத்தியது | | 5,000 |
| ரொக்கம் | 10,000 | | தொலைபேசிக் கட்டணம் | | 7,000 |
| வங்கி | 15,000 | 25,000 | மைதானம் பராமரிப்புச் செலவுகள் | | 22,500 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | | 5,500 | மட்டைகள் மற்றும் பந்துகள் வாங்கியது | | 13,000 |
| தொடர் விளையாட்டுப் போட்டி நிதி வரவுகள் | | 15,000 | போட்டிச் செலவுகள் | | 12,500 |
| சந்தா பெற்றது | | | இருப்பு கீ/இ | | |
| 2016 – 2017 | 4,500 | | ரொக்கம் | 5,000 | |
| 2017 – 2018 | 65,000 | | வங்கி (இருப்புக் கட்டும் தொகை) | 55,000 | 60,000 |
| 2018 – 2019 | 5,000 | 74,500 | | | |
| | | 1,20,000 | | | 1,20,000 |

43) a)

ப தென்காசி திருவள்ளுவர் மன்றத்தின் ஏடுகளில் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு வ

| செலவுகள் | ரூ. | வருமானம் | ரூ. |
|---|---|---|---|
| வாடகை | 24,000 | வட்டிப் பெற்றது | 5,000 |
| சம்பளம் | 20,000 | சந்தா | 55,000 |
| பயணச்செலவுகள் | 2,000 | நுழைவுக் கட்டணம் | 7,000 |
| அச்சு மற்றும் எழுது பொருள் | 6,000 | | |
| அறைகலன் விற்பனை மீதான நட்டம் | 1,000 | | |
| உபரி (செலவுகளைக்காட்டிலும் மிகுதியான வருமானம்) | 14,000 | | |
| | 67,000 | | 67,000 |

**(OR)**

b)

www.Padasalai.Net

குறிப்பேட்டுப் பதிவு

| நாள் | விவரம் | | பே.ப.எண் | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|---|---|---|
| 2017 ஏப்ரல் 1 | வங்கி க/கு | ப | | 10,000 | |
| | பிரகாஷ் முதல் க/கு | | | | 10,000 |
| | (பிரகாஷ் முதல் கொண்டு வந்தது) | | | | |
| " | மறுமதிப்பீட்டு க/கு | ப | | 11,000 | |
| | இயந்திரம் க/கு | | | | 6,000 |
| | அறைகலன் க/கு | | | | 3,000 |
| | வாரா ஐயக்கடன் ஒதுக்கு க/கு | | | | 2,000 |
| | (இயந்திரம் மற்றும் அறைகலன் மீதான தேய்மானம் மற்றும் வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கியது | | | | |
| " | கணக்குகளின் மூலம் பெறவேண்டியவைகள் க/கு | | | 1,000 | |
| | மறுமதிப்பீட்டு க/கு | | | | 1,000 |
| | (பதிவு பெறாத கணக்குகளின் மூலம் பெற வேண்டியவைகள் பதிவு செய்யப்பட்டது ) | | | | |
| " | ரகு முதல் க/கு | | | 6,000 | |
| | சாம் முதல் க/கு | ப | | 4,000 | |
| | மறுமதிப்பீட்டு க/கு | | | | 10,000 |
| | (மறுமதிப்பீட்டு நட்டம் முதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | | | |

ப மறுமதிப்பீட்டுக் கணக்கு வ

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. | ரூ. |
|---|---|---|---|---|
| இயந்திரம் க/கு | 6,000 | கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகள் க/கு | | 1,000 |
| அறைகலன் க/கு | 3,000 | மறுமதிப்பீட்டு நட்டம்: | | |
| வாரா ஐயக்கடன் ஒதுக்கு க/கு | 2,000 | ரகு முதல் க/கு (3/5) | 6,000 | |
| | | சாம் முதல் க/கு (2/5) | 4,000 | 10,000 |
| | 11,000 | | | 11,000 |

ப முதல் கணக்கு வ

| நாள் | விவரம் | ரகு ரூ. | சாம் ரூ. | பிரகாஷ் ரூ. | நாள் | விவரம் | ரகு ரூ. | சாம் ரூ. | பிரகாஷ் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மறுமதிப்பீட்டு க/கு | 6,000 | 4,000 | - | | இருப்பு கீ/கொ | 40,000 | 30,000 | - |
| | இருப்பு கீ/இ | 34,000 | 26,000 | 10,000 | | வங்கி க/கு | - | - | 10,000 |
| | | 40,000 | 30,000 | 10,000 | | | 40,000 | 30,000 | 10,000 |
| | | | | | | இருப்பு கீ/கொ | 34,000 | 26,000 | 10,000 |

44) a)

ப கூட்டாளிகளின் முதல் கணக்கு வ

| நாள் | விவரம் | சாந்தி ரூ. | சுமதி ரூ. | நாள் | விவரம் | சாந்தி ரூ. | சுமதி ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 2018 | | | | 2018 | | | |
| | | | | ஜன 1 | இருப்பு கீ/கொ | 1,00,000 | 80,000 |
| டிச 31 | இருப்பு கீ/இ | 1,10,000 | 1,00,000 | ஜூன் 1 | வங்கி | 10,000 | 20,000 |
| | | 1,10,000 | 1,00,000 | | | 1,10,000 | 1,00,000 |
| | | | | 2019 | | | |
| | | | | ஜன 1 | இருப்பு கீ/கொ | 1,10,000 | 1,00,000 |

ப கூட்டாளிகளின் நடப்புக் கணக்கு வ

| நாள் | விவரம் | சாந்தி ரூ. | சுமதி ரூ. | நாள் | விவரம் | சாந்தி ரூ. | சுமதி ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | எடுப்புகள் | 20,000 | 13,000 | | இருப்பு கீ/கொ | 5,000 | 3,000 |
| | எடுப்புகள் மீது வட்டி | 500 | 300 | | இலாபநட்டப் பகிர்வு கணக்கு (இலாபப் பங்கு) | 10,000 | 8,000 |
| | இருப்பு கீ/இ | 9,800 | 4,300 | | முதல் மீது வட்டி | 6,300 | 5,400 |
| | | | | | சம்பளம் | 9,000 | -` |
| | | | | | கழிவு | - | 1,200 |
| | | 30,300 | 17,600 | | | 30,300 | 17,600 |
| | | | | | இருப்பு கீ/கொ | 9,800 | 4,300 |

**(OR)**

b)

(i) மொத்த இலாப விகிதம் = $\frac{\text{மொத்த இலாபம்}}{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}}$ x 100 = $\frac{4,000}{20,000}$ x 100 = 20%

விற்பனை மூலம் பெற்ற = கொள்முதல் செய்த சரக்குகள் + சரக்கிருப்பு மாற்றம் + நேரடிச் செலவுகள்
வருவாய்க்கான அடக்கவிலை
= 17,000 – 1,000 + 0 = ரூ.16,000
மொத்த இலாபம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய் – விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை
= 20,000 – 16,000 = ரூ.4,000
(ii) நிகர இலாப விகிதம் = $\frac{\text{வரிக்கு பின்னர் உள்ள நிகர இலாபம்}}{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}}$ x 100 = $\frac{1,500}{20,000}$ x 100 = 7.5%
வரி இல்லை எனக் கொள்ளவும்.
(iii) இயக்க அடக்கவிலை விகிதம் = $\frac{\text{மொத்த இலாபம்}}{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}}$ x 100 = $\frac{18,400}{20,000}$ x 100 = 92%

இயக்க அடக்கவிலை = விற்பனைற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை + இயக்கச் செலவுகள்
இயக்கச் செலவுகள் = இதர செலவுகள் = ரூ.2,400
இயக்கக்க அடக்கவிலை = 16,000 + 2,400 = ரூ.18,400
(iv) இயக்க இலாப விகிதம் = $\frac{\text{மொத்த இலாபம்}}{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}}$ x 100 = $\frac{1,600}{20,000}$ x 100 = 8%

இயக்க இலாபம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய் – இயக்க அடக்கவிலை
= 20,000 – 18,400 = ரூ.1,600

45) a)

ப 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாபநட்ட ப்
பகிர்வு கணக்கு வ

| விவரம் | ரூ. | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் மீதான வட்டி கணக்கு: | | | இலாபநட்ட க/கு | 3,65,000 |
| அந்தோணி (4,00,000 x 5%) | 20,000 | | | |
| ரஞ்சித் (3,00,000 x 5%) | 15,000 | 35,000 | | |
| அந்தோணி ஊதிய க/கு | | 90,000 | | |
| ரஞ்சித் கழிவு க/கு | | 48,000 | | |
| கூட்டாளிகளின் முதல் கணக்கு: (லாபம்) | | | | |
| அந்தோணி (1,92,000 x 1/2) | 96,000 | | | |
| ரஞ்சித் (1,92,000 x 1/2) | 96,000 | 1,92,000 | | |
| | | 3,65,000 | | 3,65,000 |

**குறிப்பு:**
**கழிவு கணக்கிடுதல்:**
கழிவுக்கு முன் உள்ள இலாபம் = 3,65,000 - (35,000 + 90,000)
= 2,40,000

கழிவு = கழிவுக்கு முன் உள்ளநிகர இலாபம் × $\frac{\text{கழிவு வீதம்}}{\text{100 + கழிவு வீதம்}}$

கழிவு = 2,40,000 x $\frac{25}{125}$ = ரூ.48,000

**(OR)**

b)

நெய்தல் வரையறு நிறுமத்தின் போக்குப் பகுப்பாய்வு

| விவரம் | ரூ.இலட்சங்களில் | | | போக்குப் பகுப்பாய்வு | | |
|---|---|---|---|---|---|---|
| | 2015-16 | 2016-17 | 2017-18 | 2015-16 | 2016-17 | 2017-18 |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 150 | 135 | 90 | 100 | 90 | 60 |
| கூட்டுக: இதர வருமானம் | 25 | 5 | 15 | 100 | 20 | 60 |
| மொத்த வருவாய் | 175 | 140 | 105 | 100 | 80 | 60 |
| கழிக்க: செலவுகள் | 125 | 75 | 50 | 100 | 60 | 40 |
| வரிக்கு முன்னர் உள்ள இலாபம் | 50 | 65 | 55 | 100 | 130 | 110 |
| கழிக்க: வருமானவரி (40%) | 20 | 26 | 22 | 100 | 130 | 110 |
| வரிக்கு பின்னர் உள்ள இலாபம் | 30 | 39 | 33 | 100 | 130 | 110 |

46) a)

சரிக்கட்டப்பட்ட இலாபம் கணக்கிடுதல்

| விவரம் | 2016 ரூ. | 2017 ரூ. | 2018 ரூ. |
|---|---|---|---|
| இலாபம் | 30,000 | 29,000 | 32,000 |
| கழிக்க: திரும்பத் திரும்ப நிகழா வருமானம் | 3,000 | - | - |
| | 27,000 | 29,000 | 32,000 |
| கூட்டுக: சரக்கிருப்பு தீயினால் சேதமடைந்தது (அசாதாரண நட்டம்) | - | 2,000 | - |
| சரிக்கட்டப்பட்ட பின் இலாபம் | 27,000 | 31,000 | 32,000 |

சராசரி இலாபம் = $\frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$

= $\frac{27,000+31,000+32,000}{3}$

= $\frac{90,000}{3}$ =ரூ.30,000

| விவரம் | ரூ. |
|---|---|
| எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய காப்பீட்டு முனைமத்தினை சரிக்கட்டுவதற்கு முன் சராசரி இலாபம் | 30,000 |
| கழிக்க : எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய காப்பீட்டு முனைமம் | 5,600 |
| சராசரி இலாபம் | 24,400 |

நற்பெயர் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை
= 24,400 x 2
= ரூ.48,800

**(OR)**

b)



www.Padasalai.Net

சந்திரா வரையறு நிறுமத்தின்
2016, மார்ச் 31 மற்றும் 2017, மார்ச் 31 ஆம் நாளைய
ஒப்பீட்டு இருப்புநிலைக்குறிப்பு

| விவரம் | 2015-16 ரூ. | 2016-17 ரூ. | தொகையின் கூடுதல் (+) அல்லது குறைவு (-) ரூ. | சதவீதத்தின் கூடுதல் (+) அல்லது குறைவு (-) |
|---|---|---|---|---|
| I. பங்குமூலதனம் மற்றும் பொறுப்புகள் | | | | |
| பங்குதாரர் நிதி | 1,00,000 | 2,60,000 | +1,60,000 | +160 |
| நீண்ட காலப் பொறுப்புகள் | 50,000 | 60,000 | +10,000 | +20 |
| நடப்புப் பொறுப்புகள் | 25,000 | 30,000 | +5,000 | +20 |
| மொத்தம் | 1,75,000 | 3,50,000 | +1,75,000 | +100 |
| II. சொத்துகள் | | | | |
| நிலைச் சொத்துகள் | 1,00,000 | 2,00,000 | +1,00,000 | +100 |
| நடப்புச் சொத்துகள் | 75,000 | 1,50,000 | +75,000 | +100 |
| மொத்தம் | 1,75,000 | 3,50,000 | +1,75,000 | +100 |

47) a)

சராசரி இலாபம் = $\frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$

$= \frac{30,000+40,000+50,000+45,000}{4}$

$= \frac{1,62,000}{4}$ = ரூ.40,500

சாதாரண இலாபம் = பயன்படுத்தப்பட்ட முதல் x சாதாரண இலாப விகிதம்
= 3,00,000 x 10%
= ரூ.30,000
உயர் இலாபம் = சராசரி இலாபம் - சாதாரண இலாபம்
= 40,500 - 30,000

நற்பெயர் = $\frac{\text{உயர் இலாபம்}}{\text{சாதாரண இலாப விகிதம்}} \times 100$

$= \frac{10,500}{10} \times 100$

நற்பெயர் = ரூ.1,05,000

**(OR)**

b)

ஜெனிபர் நிறுமத்தின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | | பே.ப.எ | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|---|---|---|
| | வங்கி க/கு (10,000 x 3) | ப | | 30,000 | |
| | நேர்மைப் பங்கு விண்ணப்பணப்பக் க/கு | | | | 30,000 |
| | (பங்கு விண்ணப்பப் பணம் பெற்றது) | | | | |
| | நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு | ப | | 30,000 | |
| | நேர்மைப் பங்குமுதல் க/கு | | | | 30,000 |
| | (பங்கு விண்ணப்பப் பணம் பங்குமுதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | | | |
| | நேர்மைப்பங்கு ஒதுக்கீட்டு க/கு (10,000 x 3) | | | 30,000 | |
| | நேர்மைப் பங்குமுதல் க/கு | | | | 30,000 |
| | வங்கி க/கு (10,000 x 3) | ப | | 30,000 | |
| | நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டு க/கு | | | | 30,000 |
| | (ஒதுக்கீட்டுப் பணம் பெற்றது) | | | | |
| | நேர்மைப் பங்கு முதல் அழைப்பு க/கு | ப | | 20,000 | |
| | நேர்மைப் பங்குமுதல் க/கு | | | | 20,000 |
| | (முதல் அழைப்பு பணம் பெற வேண்டியது) | | | | |
| | வங்கி க/கு (10,000 x 2) | ப | | 20,000 | |
| | நேர்மைப் பங்கு முதல் அழைப்பு க/கு | | | | 20,000 |
| | (முதல் அழைப்பு பணம் பெற்றது | | | | |
| | நேர்மைப் பங்கு இரண்டாம் மற்றும் இறுதி அழைப்பு க/கு (10,000 x 2) | ப | | 20,000 | |
| | நேர்மைப் பங்குமுதல் க/கு | | | | 20,000 |
| | (இரண்டாம் மற்றும் இறுதி அழைப்பு பணம் பெற வேண்டியது) | | | | |
| | வங்கி க/கு (9,900 x 2) | ப | | 19,800 | |
| | நேர்மைப் பங்கு இரண்டாம் மற்றும் இறுதி அழைப்பு க/கு | | | | |
| | (இரண்டாம் மற்றும் இறுதி அழைப்பு பணம் பெற்றது) | | | | |
| | நேர்மைப் பங்குமுதல் க/கு (100 x 10) | ப | | 1,000 | |
| | நேர்மைப் பங்கு இரண்டாம் மற்றும் இறுதி அழைப்பு க/கு | | | | 200 |
| | பங்கு ஒறுப்பிழப்பு க/கு | | | | 800 |
| | (100 பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பய்யப்பட்டது) | | | | |
| | வங்கி க/கு (100 x 7) | ப | | 700 | |
| | பங்கு ஒறுப்பிழப்பு க/கு | ப | | 300 | |
| | நேர்மைப் பங்குமுதல் க/கு (100 x 10) | | | | |
| | (ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகள் மறுவெளியீடு செய்யப்பட்டது) | | | | |
| | பங்கு ஒறுப்பிழப்பு க/கு (800-300) | ப | | 500 | |
| | முதலினக் காப்பு க/கு | | | | 500 |
| | (மறுவெளியீட்டு இலாபம் முதலினக்காப்பு கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | | | |